# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2014 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பௌத்த விகாரைகளை மறுசீரமைத்தல் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2014, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 17.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

**2014 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பௌத்த விகாரைகளை மறுசீரமைத்தல் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[*2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. (கூட்டி.) 15/2010*

**பௌத்த விகாரைகளை மறுசீரமைத்தல் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

''பௌத்த விகாரைகளை மறுசீரமைத்தல் மன்றம்'' என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புடைய அதனது எல்லாக் குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுற கொண்டு நடாத்தி நிறைவேற்றும் நோக்கத்துக்காக இதற்குமுன்னர் உருவாக்கப் பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

அத்துடன், சொல்லப்பட்ட மன்றமானது எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப் பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக கொண்டுநடாத்தியும் நிறைவேற்றியும் வந்துள்ளதாதலாலும், கூட்டிணைக்கப்படுவதற்காக விண்ணப் பித்துள்ளதாதலாலும், அது அத்தகைய விண்ணப்பத்தை அனு மதித்தல் உசிதமானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, பௌத்த விகாரைகளை மறுசீரமைத்தல் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பௌத்த விகாரைகளை மறுசீரமைத்தல் மன்றத்தின் தற் போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன் பின்னர் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" பௌத்த விகாரைகளை மறுசீரமைத்தல் மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ''பௌத்த விகாரைகளை மறு சீரமைத்தல் மன்றம்'' என்ற பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர் கொண்டு வழக்குத்தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினை யொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப் படுகின்றது:-

(அ) நிதி நெருக்கடிகளை எதிர்நோக்கும் பௌத்த ஆலயங்களுக்கு அத்தகைய ஆலயங்களுக்குச் சொந்த மான நிலமனையினுள் அமைந்துள்ளதும் புனரமைப்பு தேவைப்படுத்துவதுமான அத்தகைய பௌத்த ஆலயங்களின் மற்றும் கட்டிடங்களின் உட்கட்டமைப்பை முன்னேற்றுவதற்கு நிதி மற்றும் வேறு உதவிகளை வழங்குதல் ;

(ஆ) இடப்பரப்பிலுள்ள பௌத்தர்களிடையே தேசிய மற்றும் மதச் சம்பிரதாயங்களில் ஈடுபடுமாறு ஊக்குவிப்பதன்மூலம் பௌத்தர்களிடையே ஆன்மீக விழுமியங்களைப் பேணிவளர்ப்பதற்கு அவசியமான வழிமுறைகளை மேற்கொள்ளுதலும் பௌத்த வாழ்க்கைமுறையை மேம்படுத்துதலும் ; அத்துடன்

(இ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களையுடைய வேறு ஏதேனும் நிறுவனத்துடன் எண்ணங்கள் மற்றும் அனுபவத்தை பரிமாறுவதற்கு வசதியளிக்கச் செய்யும் நோக்குடன் ஒருங்கிணைந்து பணியாற்றுதல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமைத்துவமும் நிருவாகமும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும், 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகளுக்கிணங்க உறுப்பினர்களையும் கொண்டமைந்த (இதனகத்துப்பின்னர் "குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைக்குழுவினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது குழு இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடனடுத்து நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கின்ற மன்றத்தின் குழு உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்க புதிய குழுவானது நியமிக்கப்படும்வரையில் தொடர்ந்து பதவி வகித்தலும் வேண்டும்.

(3) குழுவின் செயல் அல்லது நடவடிக்கை முறை எதுவும் அதன் உறுப்பினர்களிற்கிடையில் வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில், அல்லது தேர்தலில் ஏதேனும் குறைபாடுள்ளவிடத்து அல்லது அதன்கண் ஏதேனும் உறுப்பினரின் நியமனம் என்ற காரணத்தினால் மட்டும் வலிதற்றதாகாது.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**5.** இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள ஆட்களிடமிருந்து அல்லது ஒழுங்கமைப்புகளிடமிருந்து பணத்தை, கொடைகளை, நன்கொடைகளை, மானியக்கொடைகளை அல்லது வேறேதேனும் உதவியைப் பெறுதல் அல்லது சேகரித்தல் :

ஆயின், இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும் குழுவானது எல்லா வெளிநாட்டு மானியங்கள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பில் நிதி என்னும் விடயம் எவ்வமைச்சருக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சரின் அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்.

(ஆ) குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறான ஏதேனும் வங்கியில் அல்லது வங்கிகளில் நடைமுறை, சேமிப்பு அல்லது வேறு ஏதேனும் கணக்கை ஆரம்பித்தலும் பேணுதலும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு நேரடியாகவாயினும்சரி கூட்டுத்தாபனத்தால் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அலுவலர் அல்லது முகவர் ஊடாகவாயினும்சரி ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் செய்துகொள்ளுதலும், புரிதலும், நிறைவேற்றுதலும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகப் பணத்தைக் கடனெடுத்தல் அல்லது நிதிகளைத் திரட்டுதல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் நிதிகளைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் நிறுவனத்தில் முதலீடு செய்தல் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கென அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. (1) காலத்துக்குக்காலம் கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருக்கும் வாக்களிக்கும் உறுப்பினர்களின் வாக்குப் பெரும்பான்மையொன்றுடனும் பின்வரும் எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றிற்காகவும் இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினது ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல் அத்துடன் உறுப்பினர்களை அனுமதித்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் ;

(ஆ) குழுவின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது நியமித்தல் மற்றும் அவர்களுடைய தத்துவங்களும் கடமைகளும் பணிகளும் மற்றும் பதவிக் காலமும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களினதும் முகவர்களினதும் சேவையாளர்களினதும் தத்துவங்கள், கடமைகள், பணிகள் மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும் ;

(ஈ) குழுவின் கூட்டங்களைக் கூட்டுதலிலும் நடாத்துதலிலும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையும், அத்தகைய கூட்டங்களின் நேரம், இடம், அறிவித்தல்கள் மற்றும் நிகழ்ச்சிநிரல்கள், அவற்றிற்கான கூட்ட நடப்பெண் மற்றும் அவற்றில் அலுவல்களை நடாத்துதலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனங்களை முகாமை செய்தலும் நிதிகளின் கட்டுக்காப்பும் அத்துடன் பொதுவில் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றைப்போன்று அதே முறையில் அவை திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தொராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**7.** (1) கூட்டுத்தாபனம், அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கொடைகள், இறுதிவிருப்பாவணக் கையளிப்புக்கள், நன்கொடைகள், ஒப்பப்பணங்கள், உதவு தொகைகள், கட்டணங்கள் அல்லது மானியங்கள் என்ற வகையில் கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்ட எல்லாப் பணங்களும், கூட்டுத்தாபனத்தின் நிதியத்துக்கு (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வரவு வைக்கப்படுதல் வேண்டும். அத்தகைய நிதியம் குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வங்கியில் பேணப்படுதல் வேண்டும்.

(2) பின்வரும் பணத்தொகைகள் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும் :-

(அ) கொடைகள், நன்கொடைகள், ஒப்பப்பணம், உதவு தொகைகள், கட்டணங்கள் அல்லது மானியங்கள் அத்துடன் முதலீடுகளிலிருந்து கிடைக்கும் இலாபங்கள் என்ற வகையில் கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்டவையும் சேகரிக்கப்பட்டவையும் ;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும் அதன் பணிகளைப் புரிகையிலும் கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் ;

(இ) இலங்கையிலுள்ள அல்லது வெளிநாடுகளிலுள்ள வளங்களிலிருந்து கூட்டுத்தாபனத்தால் கடன்களாக, மானியக்கொடைகளாக அல்லது நன்கொடைகளாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும்.

(3) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தை ஈடுசெய்வதற்குத் தேவைப்படுத்தப்பட்டவாறான எல்லாப் பணத் தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**8.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனம் ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, மரண சாசனக் கையளிப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையில் அதற்குரித்தாக்கப்படக்கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைப் பெறவும் வைத்திருக்கவும் சட்டத்தில் இயலுமானதாதலும் ஆற்றல் உடையதாதலாலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுமுள்ள முழுத்தத்துவத்துடனும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

**9**. கூட்டுத்தாபனத்தின் பணமும் ஆதனமும் இதகனத்து எடுத்துக்காட்டப்பட்ட அதன் குறிக்கோள்களை மேம்படுத்து வதற்காக மாத்திரம் பிரயோகிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அதன் பாகம் எதுவும் பங்கிலாபம், மிகையூதியம், இலாபம் என்ற வகையில் அல்லது வேறு வகையில் கூட்டுத்தாபனத்தின் உறுப் பினர்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதலாகாது. பணத்தையும் ஆதனத்தையும் பிரயோகித்தல்.

**10**. (1) கூட்டுத்தாபனமானது அதன் வருமானங்களும் செல வினங்களும், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் ஏனைய கொடுக்கல் வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்கு களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும். கணக்குகளும், கணக்காய்வும்.

(2) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் கூட்டுத்தாபனத்தின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

**11**. (1) கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது குழுவால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் என்பதுடன், குழுவால் தீர்மானிக்கப்படும் முறையில் மாற்றப்படுதலும் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

(2) கூட்டுத்தாபனத்தின் இலச்சினை குழுவின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையில் தவிர எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அத்தகைய சாசனத்தில் தங்கள் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன் மீது எஞ்சியுள்ள ஆதனம்.*

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மீது அதன் எல்லாத் தனிசுகளையும், பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந் தளிக்கப்படுதல் ஆகாது. ஆனால், அத்தகைய ஆதனங்கள் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களை யுடைய கழகத்திற்கு அல்லது கழகங்களுக்கு கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய கழகம் அல்லது கழகங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதற்கு முன்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.*

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமை களையேனும் அல்லது ஏதேனும் அரசியற் குழுவின் அல்லது கூட்டுத்தாபனத்தின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்